
# இளைய நிலா

உ. நிசார்



# இளைய நிலா

சிறுவர் பாடல்கள் - 06

A. KUMARATHASAN
49 KALAIMAGAL ROAD
ARIYALAI WEST
JAFFNA

## நூலாசிரியரின் ஏனைய நூல்கள்

### கவிதை

| | | |
|---|---|---|
| 01. | கனவுப் பூக்கள் | - 2005 |
| 02. | ஓயாத அலைகள் | - 2007 |
| 03. | திராட்சை ரசம் | - 2009 |

### சிறுவர் பாடல்கள்

| | | |
|---|---|---|
| 01. | நட்சத்திரப் பூக்கள் | - 2006 |
| 02. | வெண்ணிலா | - 2007 |
| 03. | மலரும் மொட்டுக்கள் | - 2007 |
| 04. | சிறகு விரி | - 2008 |
| 05. | பாவிருந்து | - 2009 |

# இளைய நிலா

## சிறுவர் பாடல்கள் - 06

## உ. நிசார்

வெளியீடு
பானு பதிப்பகம்,
70/3, புதிய கண்டி வீதி, மாவனல்லை.
தொ.பே.இல: 077-8216281

இந்நூல் கல்வியமைச்சினது தேசிய நூல் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் அச்சிடப்பட்டது. இதன் உள்ளடக்கக் கருத்துக்கள் சபையின் கருத்துக்களை பிரதிபலிக்கவில்லை என்பதை கவனத்திற் கொள்ளவும்.

© எச்.எல்.எம். நிசார் - 2009

புனைப் பெயர் - உ. நிசார்

ISBN: 978-955-50064-5-3

இலங்கை தேசிய நூலகம் - வெளியீட்டில் உள்ள பட்டியற் தரவு

நிசார் எச்.எல்.எம்
இளைய நிலா: எச்.எல்.எம். நிசார் - மாவனல்லை : நூலாசிரியர், 2009
ப. 32 ; ச.மீ. 21
ISBN : 978-955-50064-5-3 விலை: ரூ. 100/=
i. 782.42 டிடிசி 21 ii. தலைப்பு
I. சிறுவர் பாடல்

Type Setting : MJM Printers
119, Main Street,
Mawanella.

Cover & Art Design : E. Udeni Shashika Harishchandra.
Hiriwadunna.

Graphic Design : M.B.M. Uwais
Mawanella.

Printed By : MJM Printers
119, Main Street,
Mawanella.

Publishers : Banu Publishers,
70/3, New Kandy Road,
Mawanella.

# கலைகள்


| | |
|---|---|
| இளைய நிலா | 07 |
| பச்சைக் கிளி | 08 |
| உவகை தரும் நாடு | 10 |
| வளம் மிகு மரங்கள் | 11 |
| தவளைத் தாத்தா | 12 |
| சேர்ந்து வாழும் எறும்பு | 14 |
| கல்வி ஒரு செல்வம் | 15 |
| அந்தி மாலை | 16 |
| கண்டி மாநகரம் | 18 |
| மயிலாட்டம் | 19 |
| வாழை | 20 |
| குட்டி முயல் | 21 |
| இதுதான் பெருமை | 22 |
| எமது பள்ளி | 23 |
| பவனி வரும் யானை | 25 |
| நல்ல காற்று | 26 |
| கடல் வருகுது | 27 |
| நாம் நல்ல சிறுவர் | 28 |
| கேளு | 29 |
| நல்ல தம்பி | 30 |
| சின்னப் பெண்ணே உனக்குத்தான் | 31 |
| சிட்டுக் குருவி ஆகுவோம் | 32 |

## முன்னுரை

அன்புள்ள சிறுவர்களே,

நட்சத்திரப் பூக்கள் முதல் பாவிருந்து வரை ஐந்து சிறுவர் பாடல் தொகுதிகளைத் தந்துள்ள நான், இளைய நிலா பாடல் தொகுதி ஊடாக உங்களை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

கலைகளாக வளரும் இளைய நிலா பூரண சந்திரனாகி ஒளியூட்டுவது போல நீங்களும் உங்கள் உடல், உள வளர்ச்சியோடு உலகுக்கு அறிவொளியூட்ட வேண்டும் என்பதை உணர்த்தவே இப்பாடல் தொகுதிக்கு இளைய நிலா என பெயரிட்டுள்ளேன். இங்கு 22 பாடல்கள் இடம்பெறுகின்றன. அவை புதிய கல்விச் சீர்திருத்தக் கருத்துகளுக்கு அமையவும் உங்களது பாடத்திட்டத்துக்கு ஏற்பவும் எழுதப்பட்டவை. அதனால் நீங்கள் அவற்றைப் பாடி, ஆடி, சுவைத்து மகிழ்வடைவதுடன் அறிவையும் பெறுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

நீங்கள் என்றும் வெற்றியாளர்களே.

நன்றி,
அன்புடன்,
உ.நிசார்

2009-10-30

நன்றி

எம்.ஏ.எம். நஜீப் (உதவிச் செயலாளர், பிரதான, கல்வி அமைச்சு, மத்தியமாகாண சபை), நிஸார் உடையார், தையுப் கான், அனஸ், பிஸ்ரு, முனவ்வர், நதீம், நஸார், வஸீரா பீபி, மர்லியா, ஜென்னா, உவைஸ், சசிகா, சியாட், ஸில்மி

M.J.M. பதிப்பகம்

தினகரன் வார மஞ்சரி, ஞாயிறு தினக்குரல், சுடர் ஒளி, நவமணி, எங்கள் தேசம், மல்லிகை, ஞானம், படிகள். நீங்களும் எழுதலாம்

# இளைய நிலா

நிலா இளைய நிலா அதோ
உலா வருகுது - கூடிக்
குழா விட வானம் கூட
குதூ கலிக்குது

கலை கட்டி வரும் இரவு
கல கலக்குது - பசும்
இலை குலை தளிர் களில்
எழில் பூக்குது

முல்லை யோடு மல்லி கையும்
முகம் மலருது - நீல
அல்லி கூட மட லவிழ்ந்து
அழகை ஊட்டுது

காடு மேடு களை நிலா
கடந்து வருகுது - நாம்
ஓடும் போது ஓடம் போல
ஓடி வருகுது

## பச்சைக் கிளி

பச்சைக் கிளியே வா வா வா
பழங்கள் உண்ண வா வா வா
உச்சி கோதி விட்டிடு வேன்
உள்ளம் மகிழ வா வா வா

பிள்ளைக் கிளியே வா வா வா
பேசும் கிளியே வா வா வா
அள்ளி அணைத்து ஆரத் தழுவ
அழகுக் கிளியே வா வா வா

கொஞ்சும் கிளியே வா வா வா
நெஞ்சம் குளிர வா வா வா
மஞ்சள் பூசி நீ ராட்ட
வண்ணக் கிளியே வா வா வா

அன்னக் கிளியே வா வா வா
அன்பு கொள்வேன் வா வா வா
விண்ணில் வட்டம் இட்டு விட்டு
மண்ணில் இறங்கி வா வா வா

உ.நிசார்



# உவகை தரும் நாடு

இலங்கை எமது நாடு - அது
உலகில் சிறந்த நாடு
வளங்க ளெல்லாம் நிறைந் திருக்கும்
வலிமை மிகுந்த நாடு

அலைகள் கொஞ்சும் நாடு - நல்ல
மழையும் பொழியும் நாடு
மலைகள் எல்லாம் வானம் வரை
நிலைத் திருக்கும் நாடு

மயில்க ளாடும் நாடு - கருங்
குயிலும் பாடும் நாடு
ஒயிலாய் ஓட நதிகள் எல்லாம்
உவகை தரும் நாடு

உழைக்க நல்ல நாடு - பெரு
விளைச்ச லுள்ள நாடு
தழைக்கும் பயிர்கள் சிரித்து மகிழும்
தண்மை யான நாடு

# வளம் மிகு மரங்கள்

நிலத்தில் வேரை ஊன்றி நேரே
நிமிர்ந்து நிற்கும் மரங்கள்
அழகை மட்டு மல்ல எமக்கு
வளங்க ளையும் அளிக்கும்

இலைகள் தளிர்கள் நிறைந்த அதன்
எழில் தரும் நிழலும்
விளையும் தனது சுகத்தைக் கொடுக்க
விருப்பத் தோடு அசையும்

மணத்தை அள்ளிப் பொழிய வல்ல
மகிமை யான மலரும்
வனப் புடனே விரிந்து பூக்க
வசந்த காலம் மலரும்

நெஞ்சம் குளிரக் காய்த் திருக்கும்
பிஞ்சு காய் கனியும்
கொஞ்சிக் கொஞ்சி நிற்கு தங்கே
குலை குலையாய் அசைந்து

## தவளைத் தாத்தா

தவளைத் தாத்தா பாய்கிறார்
தத்தித் தத்திப் பாய்கிறார்
பவளம் போன்ற கண்களால்
பார்த்துப் பார்த்துப் பாய்கிறார்

சத்தம் போட்டுக் கத்துறார்
சந்து பொந்தில் ஒளிகிறார்
நித்தம் நீரில் இருந்தாலும்
நிலத்தில் கூட வாழ்கிறார்

மழை பொழிய வருகிறார்
மகிழ்ச்சி யுடன் வருகிறார்
வளைத்து நாக்கை நீட்டியே
மடக்கி இரையைப் பிடிக்கிறார்

நிறம் பல கொண்டுள்ள
நீளமான காலும் உள்ள
மரத் தவளை என்றொருவர்
மரங் களிலே வாழ்கிறார்



## சேர்ந்து வாழும் எறும்பு

கூட்டம் கூட்ட மாக எறும்பு
　　கூடி வாழுது - எங்கும்
நோட்டம் இட்ட வாறு ஒரு
　　கோட்டில் போகுது

எட்ட இருக்கும் உணவு களை
　　எடுக்கப் போகுது - எடுத்து
கட்டி வைத்த புற்றுக் குள்ளே
　　காக்கப் போகுது

சோர்வு இன்றிச் சுறுசுறுப் பாய்
　　ஊர்ந்து போகுது - அவை
சேர்ந்து வாழும் உயிர் களிலே
　　சிறந்து விளங்குது

ஒன்றன் பின்னால் ஒவ்வொன் றாய்
　　ஒழுங்காய்ச் செல்லும் - எறும்பே
நின்று சிறிது கதைப்ப தற்கு
　　என்ன இருக்குது

# கல்வி ஒரு செல்வம்

கல்வி தற்கும் போது நாம்
கசக்கும் வேம்பு போல - அது
வெல்ல மாகக் கரைந் தினிக்கும்
வெற்றி கொண்ட பின்னே

கற்பத னால் மடமை களை
கலைத் தெறிந்து விட்டு - நாம்
உற்று நோக்கு வோம் உலகின்
உண்மை யான நிலையை

கள்வர் களும் ஒன்று கூடி
கை வரிசை காட்டி - களவு
கொள்வ தற்குச் சிரம மான
செல்வ மொன்றே கல்வி

அள்ள ஊறும் கேணி போல
அளப் பரியச் சொத்து - அதை
வெள்ளை மனங் கொண்டு ஈய
விளைந் திடுமே நன்மை

## அந்தி மாலை

வானம் சிவக்குது வையம் இருளுது
மாலை மயங்குது - இனிய
கானம் ஒன்றைப் பாடிப் கொண்டு
காற்றும் அசையுது

அல்லி மலருது முல்லை விரியுது
மல்லிகை பூத்து - அவை
அள்ளிப் பொழியும் நறும ணத்தில்
உள்ளம் மகிழுது

பரந்த வானை அழகு செய்யும்
பறவை பட்சிகள் - நல்
இரவொன் றமையக் கூடு நோக்கி
பறந்து போகுது

செக்கச் சிவந்த பந்து போல
செங்க திரோனும் - கடலில்
பக்குவ மாய் முக்கு ழிக்க
பகலும் மறையுது

உ.நிசார்



## கண்டி மாநகரம்

கண்டி மா நகரம் - நல்ல
காற்று வீசும் நகரம்
ஒன்றி ணைந்த மலைகள் பல
நின்று காக்கும் நகரம்

தொன்மை யான நகரம் - புனித
தந்தம் கொண்ட நகரம்
நன்மை கோடி பெற பக்தர்
நாடி வரும் நகரம்

கோயில் கொண்ட நகரம் - பள்ளி
வாயில் உள்ள நகரம்
யேசு பிரான் ஆலய மணி
ஓசை கேட்கும் நகரம்

குளிர் மிகுந்த நகரம் - தெப்பக்
குளம் உள்ள நகரம்
வழிந் தோடும் மகா வலி
வளைந் தோடும் நகரம்

# மயிலாட்டம்

மழையைப் பொழிந்து வானம் மகிழ
வண்ண மயில் ஆடுது - அதன்
தலையின் அபிநயங் களினால்
தாரங் களை அழைக்குது

ஆட்டம் பார்க்க வந்த குயில்
பாட்டுப் பாடி மகிழுது - இதை
நோட்ட மிட்ட குரங் கொன்று
போட்ட தாளம் ஒலிக்குது

அத்தி மரத்தின் கீழ் இருந்த
ஆமை தலையை நீட்டுது - மரங்
கொத்தி யொன்று அத்தி மரத்தை
கொத்தி இசை வழங்குது

நல்ல பாம்பு கூட வந்து
நர்த்த னத்தைப் பார்க்குது - அது
தள்ளி ஓடிச் செல்லாமல்
தலை யசைத்து ஆடுது

## வாழை

வாழை அதோ வாழை - நல்ல
வளமான வாழை
சோலை களைத் தோட்டங் களை
சோடிக்கும் வாழை

இலை விரியும் வாழை - ஒரு
கிளை யில்லா வாழை
குலை களிலே காயும் பிஞ்சும்
கூடி நிற்கும் வாழை

பல இனத்து வாழை - இனிய
பழங்கள் தரும் வாழை
கல கலக்குது காற்றில் அசைந்து
கதலி கப்பல் வாழை

அடியில் வளரும் வாழை - அது
அழகு கன்று வாழை
படிப் படியாய் உயர்ந்த பின்னே
பயனைத் தரும் வாழை

உ.நிசார்

## குட்டி முயல்

குட்டி முயல் தூர நின்று
எட்டிப் பார்க்குதே - நான்
கிட்டப் போகத் துள்ளி ஓடி
எட்டப் போகுதே

பஞ்சு போன்ற மேனி நன்கு
பள பளக்குதே - நான்
கொஞ்சி மகிழும் போது அது
குறு குறுக்குதே

ஓங்கி வளர்ந்த காதி ரண்டும்
உயர்ந்து நிற்குதே - நல்ல
பாங்கு டனே இருப்பத னால்
பழக நல்லதே

பச்சைப் புல்லை மேய்ந்து விட்டு
படுத் துறங்குமே - அதிக
அச்சங் கொண்டு ஓடும் போது
அழகு தருமே.

# இதுதான் பெருமை

தேன் நிறையுது தேன் நிறையுது
தேன் கூட்டில் தேன் நிறையுது
வீண் விரயம் ஏது மில்லை
விரை வாகத் தேன் நிறையுது

மரப் பொந்தில் மரப் பொந்தில்
மலை இடுக்கில் தேன் நிறையுது
அரசி தேனி ஆட்சி செய்யும்
அவை யெங்கும் தேன் நிறையுது

காலை முதலாய் காலை முதலாய்
மாலை வரையும் `பறந்து திரிந்து
வேலை செய்யத் தே னீக்கள்
வெற்றி யுடனே தேன் நிறையுது

வரும் முன்னே வரும் முன்னே
மாரி காலமும் வரும் முன்னே
பெரும் அளவில் தேனைச் சேர்த்து
பெருமை யுடன் தே னீவாழுது


## எமது பள்ளி

பள்ளி நல்ல பள்ளி - நாம்
கல்வி கற்கும் பள்ளி
நல்ல மனித னாக எம்மை
நாட்டுக் களிக்கும் பள்ளி

அன்பு கொள்ளும் பள்ளி - எம்மை
ஆத ரிக்கும் பள்ளி
பண்பு களில் உயர்ந்து நிற்க
பங்க ளிக்கும் பள்ளி

உறவை வளர்க்கும் பள்ளி - நல்ல
ஊக்க மளிக்கும் பள்ளி
அறம் காத்து வாழ எம்மை
அறி வுறுத்தும் பள்ளி

காப்பைத் தரும் பள்ளி - நல்ல
கணிப்பைத் தரும் பள்ளி
தோப்புப் போல நிழ லளிக்கும்
தோழன் எமது பள்ளி



# பவனி வரும் யானை

பானை போல வயிறு உள்ள
பருத்த உடல் யானை - பெரும்
தூணைப் போல நாலு காலை
தூக்கி நடக்கும் யானை

சுளகுக் காதை அசைத்த வண்ணம்
தும்பிக் கையால் பற்றி - மிக
இலகு வாகப் பாரங் களை
இழுத்து வரும் யானை

அந்தி சாயும் வேளை களில்
சிந்தை கவரும் வண்ணம் - நல்ல
பந்தி பந்தி யாய் காட்டில்
பவனி வரும் யானை

குட்டி மலை யொன்று போல
குலுங்கி நடந்து வந்து - நின்று
முட்டி மோதி மரங்க ளையும்
முறித்து வீழ்த்தும் யானை

## நல்ல காற்று

காற்று நல்ல காற்று - உயிர்
காக்கும் நல்ல காற்று
வீற்றி ருக்கும் மரங்கள் ஊடே
வீசும் நல்ல காற்று

அசையும் நல்ல காற்று - இன்
இசை எழுப்பும் காற்று
விசை களையும் தந்து உதவும்
வேக மான காற்று

பொங்கி எழும் காற்று - பெரும்
புயலாய் வரும் காற்று
தங்கு தடை யேது மின்றி
எங்கும் சுழலும் காற்று

கனிவு மிகுந்த காற்று - பல
பணிகள் செய்யும் காற்று
மனித னுடைய செய்கை களால்
மாசு படும் காற்று

## கடல் வருகுது

கடல் வருகுது கடல் வருகுது
களிப் புடனே கடல் வருகுது
அடம் பிடிக்கும் அலை களோடு
ஆர்ப்ப ரித்துக் கடல் வருகுது

விரை வாகக் கடல் வருகுது
நுரை கொண்டு கடல் வருகுது
நிரை நிரையாய் திரைக ளோடு
கரை காணக் கடல் வருகுது

எல்லை யில்லாக் கடல் வருகுது
எழுந்து பணிந்து கடல் வருகுது
அல்லும் பகலும் அலைந் தாலும்
அலுப் பின்றிக் கடல் வருகுது

அரக்கப் பரக்கக் கடல் வருகுது
அல்லல் இன்றிக் கடல் வருகுது
உறக்க மேதும் கொள் ளாது
உவகை யோடு கடல் வருகுது.

# நாம் நல்ல சிறுவர்

சின்னச் சின்ன சிறுவர் நாம்
சிரித்து மகிழும் சிறுவர் நாம்
வண்ண வண்ணக் கனவு களை
வாணா ளெல்லாம் காணுவோம்

அன்பு மிகுந்த சிறுவர் நாம்
ஆள வந்த சிறுவர் நாம்
பண்பு களால் உயர்ந்து நின்று
பாரில் சிறந்து வாழுவோம்

கள்ள மிலாச் சிறுவர் நாம்
கனிவு மிகு சிறுவர் நாம்
எல்லை யிலா உலகம் எம்மை
ஏற்கும் படி வாழுவோம்

பள்ளி செல்லும் சிறுவர் நாம்
பணிவு மிகுந்த சிறுவர் நாம்
தொல்லை யேது மில்லாத
நல்ல சிறுவர் ஆகுவோம்

# கேளு

கேளு தம்பி கேளு - நீ
கேள்வி பலவும் கேளு
நாலு பேரிடம் கேளு - அவை
நன்மை பயக்கும் கேளு

இறைவன் பற்றிக் கேளு - அவன்
இரக்கம் பற்றிக் கேளு
மறைவாய் உள்ள அவனின் - பெரும்
மகிமை பற்றிக் கேளு

மண்ணைப் பற்றிக் கேளு - அதன்
வளங்கள் பற்றிக் கேளு
விண்ணைப் பற்றிக் கேளு - இரவு
விடிவதே னென்று கேளு

நிலவைப் பற்றிக் கேளு - வானம்
நீலம் ஏனென்று கேளு
மலரைப் பற்றிக் கேளு - அதன்
மணத்தைப் பற்றியும் கேளு

# நல்ல தம்பி

உலகம் எங்கள் கை களுக்குள்
உணர்ந்தி டுவோம் தம்பி
நலங்கள் செய்து வாழ என்றும்
பழ கிடுவோம் தம்பி

வேற்றுமைகள் மறந்து உலகில்
வாழ வேண்டும் தம்பி
ஏற்றத் தாழ்வு இல்லை யென
இயம்ப வேண்டும் தம்பி

உழைப் பாலே உயர்ந் திடலாம்
உண்மை யிது தம்பி
சளைக் காமல் உலகில் வாழ்ந்து
நிலைக்க வேண்டும் தம்பி

சாதி மத ஒற்றுமை யால்
சாதிப் போம் தம்பி
நீதி யுடன் வாழ்ந்து நாங்கள்
நிறை வடைவோம் தம்பி

உ.நிசார்

## சின்னப் பெண்ணே உனக்குத்தான்

சின்னப் பெண்ணே சின்னப் பெண்ணே
சிறிது நில்லடி - நீ
மண்ணில் சிறந்து வாழ நல்ல
வழிகள் கேளடி

கல்வி உனக்குக் கை கொடுக்கும்
செல்வம் ஒன்றடி - அதை
நல்ல முறையில் கற்றுத் தேற
நாட்டம் கொள்ளடி

உண்மை பேச நன்மை விளையும்
என்று உணரடி - உன்
அன்பால் சகல உள்ளங் களையும்
வென்று மகிழடி

பெண்மைக் குள்ள தன்மை உனக்கு
பெருமை தருமடி - உன்னை
மென்மை மிகுந்த மலரொன் றாக
எண்ணம் கொள்ளடி

# சிட்டுக் குருவி ஆகுவோம்

சிட்டுக் குருவி ஒன் றதோ
சிற கடித்துப் பறக்குது
எட்டி வான வெளி யினை
தொட்டுப் பார்க்கத் துடிக்குது

பட்டுப் போன்ற மேகத் தில்
முட்டி மோதி டாமலே
எட்ட நின்று எழுந்து பணிந்து
வட்ட மிட்டுப் பறக்குது

எல்லை யிலா வான மும்
எங்கும் போல விரிந்திட
தொல்லை களும் இன்றி யே
தொடர்ந்து அது பறக்குது

மட்டி லாத ஆசை யில்
மன மகிழ்ந்து நாமுமே
கட்டிக் கொண்டு சிற கினை
சிட்டுக் குருவி ஆகுவோம்

உ.நிசார்



கலாபூஷணம் உ.நிசார், சிறுவர்களுக்காக முன்வைத்துள்ள இன்னுமொரு பாடல் தொகுதியே இளையநிலா.

பல வருட காலம் சிறுவர்களுக்குக் கற்பிக்கும் பணியில் ஈடுபட்டு சிறந்த அனுபவங்களைப் பெற்றுள்ள அவர், இப்பாடல் தொகுதியில் இயற்கைக் காட்சிகள், இயற்கையின் எழில், விலங்கினங்கள், மரம், செடி, கொடிகள், செல்லப்பிராணிகள், அறிவுரைகள், நற்பழக்கவழக்கங்கள், பொழுது போக்குகள், கல்வியின் மகத்துவம் போன்ற பல்வேறு விடங்களை உள்ளடக்கி பாடல்களை யாத்துள்ளார்.

இதன் மூலம் சிறுவர்களின் கவிதையாக்கத் திறனை வளர்ப்பதற்கும் இரசனையைத் தூண்டுவதற்கும் மொழித்திறனை விருத்தி செய்வதற்கும் சொல்வளத்தைப் பெருக்குவதற்குமாக அவர் எடுத்த முயற்சி பாராட்டத்தக்கது.

அத்துடன் இப்பாடல் தொகுதியில் இடம்பெறும் பாடல்களை தரம் 3,4,5 சிறுவர்கள் கற்றுத் தேர்வதன் மூலம் சிறந்த பயனைப் பெறுவார்கள் என்பதில் பூரண நம்பிக்கை கொள்ளலாம்.

**எம்.ஏ.எம். நஜீப்**
**உதவிச் செயலாளர்,**
**மத்திய மாகாண பிரதான அமைச்சு, கல்வி அமைச்சு,**
**மத்திய மாகாண சபை,**
**கட்டம்பே,**
**பேராதெனிய.**

ISBN: 978-955-50064-5-3

விலை: ரூ. 100/=

MJM Printers - Mawanella Tel: 035 4930471/ 035 5678454